தென்றல்

விலை 16 புதியகாசுகள்

ஆசிரியர் : கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம் : 'தென்றல்' சென்னை - 6.

மலர் 5 | சென்னை | 29-11-58 | சனிக்கிழமை | இதழ் 24

மடல் தீட்டும் மகாலிங்கம் !

ஆபாச வாணி - மன்னிக்கவும் – ஆகாஷ்வாணி, ஆற்றும் அருந் தொண்டுகள் அனந்தம். அதை இயக்கும் கேஸ்கருக்கு இருக்கிறதே இரட்டை மூளை - அது நீடுழி வாழட்டும்!

"பொது மக்களின் சாதனம், இது!" என்று சொல்லிக் கொண்டே, குறிப்பிட்ட இயக்கத்தின் திருப்புகழ் பாடிக் காதைக் கிழிக்கும் வானொலியின் வரலாற்றில் உள்ள கறைகள், பலப்பல.

சென்னை காங்கிரசாரின் "சாதனைகளை" விளம்பரப் படுத்த கிடைத்த இலவசக் கருவி, சென்னை வானொலி! "வாழ்வு தரப் போகிறோம்!" என நாள்தோறும் வானொலி மூலம் சர்க்கரை மழை பொழிகின்றனர். காங்கிரசின் பெருமை பாடும் இந்த நிகழ்ச்சியை நடத்த வானொலி ஏதும் தனிப்பட வாடகை பெற்றுக்கொண்டுள்ளதா காங்கிரசிடம்? காங்கிரசின் மகாத்மியங்களையும், ஊர் பேர் தெரியாத கணபாடிகளின் கதா காலட்சேபங்களையும் ஒலி பரப்ப அன்னார் பெற்ற வாடகை எவ்வளவு? "வாடகை கிடையாது; வரிப் பணத்தால்தான் இச்செலவுகள் நடக்கின்றன!" என்றால்! வானொலியினரே! வரி தந்தும், தலைவலியைத் தானா தமிழகத்தார் பெற வேண்டும்? "அநீதி ஆர்ப்பரிக்கும் இந்த அநியாயம் அழியாதா? அனைவருக்கும் வானொலியின் பயன் கிடைக்காதா?" எனத் தமிழகத்தார் வருந்துவதைத் தவிர வழி வேறில்லையா?

தமிழகத்து வானொலியில் வட இந்திய மொழி நிகழ்ச்சிகள் நடக்கின்றன. நாவலரும் திரு. வி. பி. இராமனும் அதிகாரிகளைக் கண்டு இதைக் கண்டித்தனர். ஆனால் தமிழ்ப் பாட்டுக்கு இந்தியில் விளக்கவுரை சொல்லும் "விவித் பாரத்" ஒழியவில்லை!

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் கண்டித்தார், "ஆகாஷ் வாணி" எனச் சொல்வதை. "இந்திப் பாடம், இந்தி இசை ஆகியவற்றின்மூலம் தமிழர் நாட்டுக்கும் மொழிக்கும் தீது சூழ்கின்றன, திருச்சி, சென்னை வானொலி நிலையங்கள்! தமிழர் கலை அங்கே அழிக்கப்படுகிறது. தமிழிசை அங்கே கொல்லப்படுகிறது. மெல்லிசைப் பகுதியைச் சார்ந்த இசைத் தட்டுக்கள் எப்போதாவது ஒலிபரப்பப்படுகின்றன. அவற்றிலும் தவறாது பல இந்திப் பாடல்கள்! இங்குள்ள கக்கனும் காமராசரும் அந்த இந்தி இசையைத்தான் கேட்டு மகிழ்கின்றனரா?

தமிழ்ப் பண்பு அங்கே சிதைக்கப்படுகிறதே! இதுதான், வரி தரும் தமிழக மக்கள் தமிழக வானொலி நிலையங்கள் மூலம் பெறும் பயனா? நமக்குக் கேடு சூழும் இந்நிலைய நிகழ்ச்சிகளில் கலந்திட மறுக்கிறேன்! அன்னார் தமிழுக்கு இழைக்கும் அநீதியை எதிர்க்கிறேன்! அதற்காகப் போரும் நிகழ்த்துவேன்!" என அறிவித்தார் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்.

தமிழ் அழிக்கும் வானொலி நிலையத்தார் தம் நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள அவரைப் பல முறை அழைத்தும், அவர் மறுத்துவிட்டார். மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழாவில் பேசுகையில் அவர் முன் வைக்கப்பட்ட திருச்சி வானொலி நிலையத்தாரின் ஒலி பெருக்கிக் கருவிகளை ஒதுக்கி வைத்தார். "என் பேச்சை நீங்கள் ஒலி பரப்ப வேண்டியதில்லை" என்றும் சொன்னார்!

இப்போது, மாற்றம் காண, உண்ணா விரதமும் இருக்க விருக்கிறார். ஆனாலும் திருச்சி வானொலி இன்னும் "ஆபாச வாணி"யாகவே இருக்கிறது. ஆன பயன் ஏதும் இல்லை! நேரடியாகவும் இந்தியை புகுத்தத் தான் செய்கிறது.

அவரது உடலை வருத்தித் தான், மாற்றம் காண வேண்டுமா? தமிழ் வளர்க்கும் தகைமையார் அவர், துன்பப்படத் தான் வேண்டுமா?

"ஆமாம்! ஆமாம்!" என்று தான் சொல்கிறதா, வஞ்ச மிழைக்கும் வானொலி?

அத்தோடு வானொலி நிலையங்களின் நிர்வாகத்தில் நடந்த சில "கிருஷ்ண லீலா"க்கள் சம்பந்தம் பயங்கரமானவையாம்! இதனாலேதான் சென்னை நிலையத்தை "ஆபாச வாணி" என்று கூடச் சொல்கின்றனராம்!

இந்த அநீதிகளும் ஊழல்களும் போதாதென்று டெல்லி நிலையத்தில் அண்மையில் நடந்த ஊழல் ஒன்று திடுக்கிட வைக்கிறது. அதற்குப் பலியானவர் புகழ் வாய்ந்த புல்லாங்குழல் இசைக்காரர் திரு. டி. ஆர். மகாலிங்கம். தன் பெயர் கெடும் வகையில் நிகழ்ந்த அச்செயல் குறித்து "இந்து" ஏட்டின் 25-11-'58-ம் நாள் இதழில் அவர் எழுதிய கடிதத்தின் மொழி பெயர்ப்பு, இதோ:

"ஐயா,

நான் உடல் நலக் குறைவினால் (நவம்பர் 15) சனியன்று நடந்த **தேசிய நிகழ்ச்சியில்** கலந்து கொள்ள இயலாது போய், அதை நிர்வாகிகளுக்கு அறிவித்தும் விட்டேன். ஆனால், குறிப்பிட்ட நேரத்தில் எனது பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சி ஒன்று ஒலிக்கக் கேட்டு வியந்தேன். (அது சில காலத்திற்குமுன் பதிவு செய்யப்பட்டது; ஆனால் தேசிய நிகழ்ச்சி எதற்காவும் அன்று!) **அத்தோடு தொடக்கத்தில் தரப்பட்ட விளக்கவுரை நானே நேரடியாக நிகழ்ச்சியை நடத்துவதாகப் பொருள்பட்டது.** இயற்கையாக, கலைஞர்கள் தேசிய நிகழ்ச்சி போன்ற முக்கிய நிகழ்ச்சிகளில் அரிதில்தான் வாசிக்க முடிகின்றது. அத்தோடு, நிர்வாகிகளால் செய்யப்பட்ட இந்த ஏற்பாடு கலைஞனின் நலனுக்கு உகந்ததாய் இல்லை. நிர்வாகிகள், நிகழ்ச்சியைக் கேட்கும் பொது மக்களுக்கு, குறைந்த பட்சம், உண்மையையாகிலும் அறிவித்திருக்கலாம்.

இப்படிக்கு
புல்லாங்குழல்
டி. ஆர். மகாலிங்கம்"

பெங்களூர்.

கலைஞரின் கடிதத்தைக் கண்டோரே! வானொலியினர் வரி தரும் பொதுமக்களை ஏமாற்றுவதில் இதுவும் ஒரு தொடர் நிகழ்ச்சி என்பதைத் தவிர வேறென்ன சொல்லமுடியும்? வளரட்டும்; வாழட்டும்; வானொலியின் வஞ்சக, அநீதி, ஊழல் படலங்கள்!

"வாழ்வதா, வானொலியின் வஞ்சச் செயல்கள்? அனுமதிக்கலாமா, ஆண்மைச் சிங்கக் கூட்டம் நாம்?" என்று கொதிப் போர் முழக்கமும் கேட்கத்தான் செய்கிறது. வேறென்ன செய்வது! மடல் தீட்டினார் மகாலிங்கம். மனம் நொந்து அறிக்கை விடுகிறார் விசுவநாதம். மானம் காப்போர் படையைத்தான்— மறத் தமிழர் அணியைத்தான், காணோமே!

★

டாங்கே எங்கே?
ஒரு சோக வரலாறு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் கவுன்சில் கூட்டம் சென்னையில் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது சிறிதளவு தெளிவு நிறைந்த கம்யூனிஸ்டுகள் எல்லாம் தங்களுக்குள்ளேயே ஒரே ஒரு கேள்வியை அடிக்கடி கேட்டுக் கொண்டார்கள். என்ன அந்தக் கேள்வி? "டாங்கே எங்கே?" என்பதுதான். கம்யூனிஸ்டுகளின் வணக்கத்துக்குரிய தோழர் டாங்கே சென்னை விவாதங்களிலே கலந்து கொள்ளாத காரணம் அவர் மாஸ்கோவில் தங்கியிருந்தார்! சென்ற பதினைந்தாம் தேதி அவர் புதுடில்லி வந்து சேர்ந்தார்! அவரைக் காணவில்லையே - சென்னைக்கு வராததற்குக் காரணம் புரியவில்லையே என்று கலங்கிக்கொண்டிருந்த சாதாரண கம்யூனிஸ்டுகளுக்கு பம்பாய் 'கரண்ட்' பத்திரிகையில் வெளி வந்த "Dange's life in Danger" என்ற கட்டுரை பெரும் கவலையைத் தந்தது! அந்தக் கட்டுரை டாங்கேயின் உடல் நிலையை மட்டுமல்ல கம்யூனிஸ்ட் கட்சியின் உடல் நிலையைப்பற்றியும் பல செய்திகளைத் தெரிவித்தது. "கம்யூனிஸ்டுகளைப்பற்றி" நாமும் சில புரிந்துகொள்வோம். "இந்தியக் கம்யூனிஸ்ட் வட்டாரம் சுரம் குறைந்த குரலிலே மாஸ்கோவில் இருக்கும் தோழர் சிபாத் அமிர் டாங்கே (எஸ். ஏ. டாங்கே)யின் உடல் நிலையைப்பற்றித் தெரிவிக்கிறார்கள். டாங்கேயின் நிலை மிகவும் மோசமாக இருப்பதாக அவர்கள் கருதினாலும் - அவர் நவம்பர் பதினேழாம் தேதிக்குமுன் இந்தியாவுக்குத் திரும்புவார் என்றும் சிலர் நம்புகிறார்கள். தன் உண்மையான நிலவரத்தை - வாழ்க்கை நிலையைத் தன் நெருங்கிய நண்பர்களுக்கு டாங்கே தெரிவித்துவிட்டார். அவருடைய மகளும் மருமகனும்கூட மாஸ்கோவில் அவருடன் இருக்கிறார்கள். மாஸ்கோவில் அவர் சுகமான நிலையில் இல்லையென்றாலும் டாங்கே இரண்டு மாதங்களுக்குமுன் இந்தியாவை விட்டுப் போனபோது வியாதி நிலவரம் தெரியவில்லை. மாஸ்கோவுக்குப் புறப்படுமுன் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்தில் இருக்கும் அகில உலகத் தொழிற்சங்க யூனியன் நிர்வாக உறுப்பினர்களைக் கண்டு பேசினார் - மற்ற கம்யூனிஸ்ட்களை மறந்துவிட்டார். கடந்த பல வருடங்களாகவே டாங்கேயும் ஒரு உறுப்பினராக இருந்து வருகிறார். **இதற்காக மாதம் ஒன்றுக்கு ரு 5000 உபகாரச் சம்பளமாகவும் பெற்றுக்கொள்கிறார்.** மூல வியாதியினாலும் ரத்த அழுத்தம் காரணமாகவும் தொல்லைப்பட்டு வந்த டாங்கே மாஸ்கோ சென்றது உண்மை. வழியில் விமான விபத்தொன்றில் மரணமுற்றார் என்றும் ஒரு செய்தி தரப்பட்டது - தவறுதான் என்றாலும் பலரும் நம்பி ஏமாந்துவிட்டார்கள்!"

இந்தியப் பாராளு மன்றத்தில் கம்யூனிஸ்டுகளின் தலைவராக இருக்கும் தோழர் டாங்கே இந்தியாவை விட்டு வெளியேறிய வேளையில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை பீடத்திலே யிருப்பவர்களின் நம்பிக்கையையும் நட்பையும் இழந்து விட்டிருந்தார். இம்ரே நாகி கொலையைப்பற்றியும், கேரளத் துப்பாக்கிப் பிரயோகம்பற்றியும் அவர் விடுத்த அறிக்கைகளினால் அவர் தன் உற்ற தோழர்களான கம்யூனிஸ்டுகளிடமும் - மற்ற செயலாளர்களிடத்திலும் மட்டுமல்லாது மாஸ்கோவிலேயுள்ள கிரெம்ளின் மாளிகைத் தலைவர்களிடத்திலும் வெறுப்பைத் தேடிக்கொண்டார். அண்மையில் நடைபெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்தில் டாங்கேயின் தரம் தாழ்த்தப்பட்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பாராளுமன்றக் குழுவின் தலைவராக தோழர் புபேஷ்குப்தா தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் காரணமாகவே டாங்கே யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல் மாஸ்கோ புறப்பட்டாராம்! சென்னை தேசியக் கவுன்சில் கூட்டத்தில் கலந்துகொள்ளவே அவர் விரும்பவில்லை - அத்துடன் டாங்கே பெரும் பொறுப்புகள் வகித்து வரும் சம்யுக்த மராட்டிய சமிதியினின்றும் அவரை வெளியேற்றிவிட வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றனவாம். கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியப் பொறுப்பிலேயிருந்து டாங்கேயை விலக்கிவிட கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர்களான ரணதிவேயும் ஜோஷியும் தங்களால் சதி வேலைகளைத் திறம்பட நடத்த முடியும் என்பதை நிரூபித்துக் கொண்டு வருகிறார்கள். செயற்குழுவில் தோழர் டாங்கே அங்கம் வகிக்கிறார். அங்கே ரணதிவே - ஜோஷி குழுவிற்குப் போதுமான ஆதரவில்லை. கடந்தஇரண்டாண்டுகளுக்கு மேலாகவே அன்றுவரை கம்யூனிஸ்ட் கட்சியின் திண்டப்படாதவராகக் கருதப்பட்டு வந்த ரணதிவே, கட்சியின் நம்பிக்கை பெற்றவராகத்திடீரென்று ஒருநாள் தன்னை வெளிப்படுத்திக்கொண்டுவிட்டார். அவருடைய "அண்டர் கிரவுண்ட்" அரசியல் திட்டங்களையெல்லாம் கம்யூனிஸ்டுகள் மறந்துவிட்டார்கள் என்பதற்கு ரணதிவேயின் புதிய நுழைவு காரணமாகிறது. அதுமட்டுமல்ல அவர் தற்போது பொதுச் செயலாளராக இருக்கும் அஜய்கோஷ் இடத்தைக் கைப்பற்றவும் முனைந்துள்ளார். இந்த முயற்சியில் ரணதிவே, ஜோஷியுடன் தனக்குள்ள தகராறுகளை தாற்காலிகமாக ஒதுக்கி வைத்திருப்பதால் - இவர்கள் இருவரும் ஒருவராகி டாங்கேயிடம் தங்களுக்குள்ள அரசியல் போட்டிக் கணக்கை முதலில் முடித்துக் கொள்ள விரும்புகிறார்கள். டாங்கேயை ஒழித்துவிட்டால் ரணதிவே ஜோஷி தகராறு தானாகக் கிளம்பும். பலப் பரீட்சையில்மோதிக்கொள்ள இருவரும் தயாராக இருக்கிறார்களாம்!

மாஸ்கோ சர்வாதிகாரத்தில் அரசியல் கருத்து வேறுபாடு கொண்டவர்களை, தனிப்பட்ட முறையிலே பழி வாங்கிக்கொள்வது ஒரு பெரிய தத்துவமாக மதிக்கப்பட்டு வருகிறது. பெரியா - ஸ்டாலின் டிராட்ஸ்கி - மாலன்கோவ் - புல்கானின் - மலட்டோவ் - ஷெபிலாவ் ககனேவிச் - ஜுகாவ் - என்ற இந்தப் பட்டியில் சான்றாக உள்ளது. இந்தப் பழிவாங்கும் பண்பு இந்தியக் கம்யூனிஸ்ட்களிடத்தில் காணப்படாமல் இருந்தால் நமக்கெல்லாம் வியப்புண்டாகும். இந்தக் காம்ரேடுகளும் - தலைவர்களும் - டாங்கே விவகாரத்தில் மாஸ்கோ தத்துவத்தையே கருவியாக்கி வருகிறார்கள். ஏனெனில் டாங்கேதான் மிக முக்கியமான பிரச்னையாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை பீடத்தவர்களுக்கு இருக்கிறார். அவரை விலக்கிவிடுவதற்காகவே கட்சிக் கமிட்டிக் கூட்டங்களில் அவர் கவனிக்கப்படுவதில்லை. அவருடைய கருத்துக்களை கண்ணியப்படுத்துவதில்லை. எல்லாத் தலைவர்களும் - அஜய்கோஷிலிருந்து கோவிந்த நாயர் கடைசியாக எவரும் டாங்கேயை கண்டிக்கத் தயங்குவதில்லை! **அரசியல் கொள்கை வேறுபாடுகளுடன் டாங்கே அகில இந்தியத் தொழிற் சங்க வாயிலாகப் பெற்றுக்கொள்ளும் உபகாரச் சம்பளம்-அலவன்ஸ் - இதர வருவாய்த் துறைகளையெல்லாம் தன் அதிகாரத்தில் - தொழிற்சங்கப் பொதுச்செயலாளர் என்ற முறையில், கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பயன்படாமல் தனிமைப்படுத்திக் கொள்வதும் ஒரு மிக முக்கிய குற்றச்சாட்டாகும். இந்தியாவில் சம்பளம் வாங்கிக் கொண்டு சேவை செய்பவர்கள் கம்யூனிஸ்டுக் கட்சியினர் என்றால் தமிழ்நாட்டு வீரர்களுக்குப் பொல்லாத கோபம் வருவது வழக்கம் - அவர்களுக்காகவே இந்தச் செய்திகள் தரப்படுகின்றன. தோழர் டாங்கே தனக்குக் கிடைக்கும் நிதியையெல்லாம் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளிருக்கும் தன்னுடைய குழுவைச்**

— 7-ம் பக்கம் —

மதுரை எழுத்தாளர் மன்றம்
புதிய செயற்குழுத் தேர்வு

பாராட்டத்தக்கப் பல செயல்களைச் செய்து முடித்து, ஓராண்டைக் கடந்துவிட்டது, மதுரை எழுத்தாளர் மன்றம். வெற்றி முழக்கி ஆண்டுவிழாவும் கொண்டாடியது, போட்டிப் புயல்களுக்கிடையே! இதனைக் கண்ணுங் கருத்துமாய்க் காத்து, அல்லும் பகலும் உழைத்து, வளர்ச்சியைக் கண்ட பெருமைக்குரியோர் எண்ணற்றோர். குறிப்பாக, செயலாளராகப் பணியாற்றிய தோழர் புத்தனேரி வேங்கடாசலம், பொருளாளராக நின்று ஊக்கிய தோழர் பு. மனோகரன், துணைச் செயலாளராகக் கடன் ஆற்றிய தோழர் தியாகராசன், மற்றும் "ரவி", "கருணை", மதிவாணன் ஆகியோர் பணிகள், மக்கள் பணிகளாகும். அன்னாரை வழி நடத்திய பெருமை மறைந்த திரு. ஆ. கார்மேகனார், திரு. மா. இராசமாணிக்கனார், திரு. அ. கி. பரந்தாமனார், திரு. "ஔவை". திருமதி தே. தியாகராசன் முதலியோர்க்கு உண்டு.

ஓராண்டை முடித்த இம்மன்றம் ஒளிமிக்கத் தனது இரண்டாவது ஆண்டை நடத்த, 2-11-58 அன்று கூடிப் புதிய செயற்குழுவைத் தேர்ந்தெடுத்தது. அக்கூட்டத்திற்கு டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனார் தலைமை ஏற்றார். மன்றத்தின் சென்ற காலப்பணிகளை பாராட்டி, வருங் காலத்திற்கான வழி வகைகளை எடுத்துக் காட்டினர், பேராசிரியர் திரு. அ. கி. பரந்தாமனார், திரு. "கதிரவன்", திரு. சண்முகக்கனி முதலியோர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய செயற்குழு, வருமாறு:

தலைவர்: டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனார்.

துணைத் தலைவர்கள்: பேராசிரியர் திரு. ஔவை. துரைசாமி, திரு. அ. கி. பரந்தாமனார், திரு. கி. பழனியப்பன், திருமதி. தே. தியாகராசன். செயலாளர்: "ரவி". துணைச் செயலாளர்கள்: புத்தனேரி ரா. மதிவாணன், வி. அ. கருணை. பொருளாளர்: டபிள்யூ. சி. சுந்தரேசன்.

மற்றும் திருவாளர்கள் டி. ஏ. வி. நாதன், பு. மனோகரன், புத்தானேரி ரா. வேங்கடாசலம், திரு. தியாகராசன், "கதிரவன்", சக்திமோகன், "கூடலரசன்" முதலியோர் உள்ளிட்ட 16 பேர் செயற்குழு உறுப்பினர் ஆவர்.

புதிய செயற்குழுவும் இரண்டாவது ஆண்டும், மேலும் பல நலன்களை மன்றத்திற்கும், அதன் மூலம் நாட்டுக்கும் தர, வாழ்த்துகிறோம்! வாழ்க! வாழ்க!

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 5 ‖ 29—11—58 ‖ இதழ் 24

மாலங்கோவ் கொலை; புல்கானின் படுக்கையில்! ஜரூபினின் மரணம்; 'ஜனசக்தி' மௌனம்!

சோவியத் 'சொர்க்கபூமி'யிலிருந்து 'காம்ரேடு'களின் வாக்குறுதிகளைப் போல, சேதிகள் வரிசைவரிசையாக வந்து குவிந்தவண்ணமுள்ளன. அத்தனையும் இழவுச்சேதிகள்! பயங்கரமான காலரா தீவிரமாகப் பரவியுள்ள ஊரிலிருந்து மகிழ்ச்சி தரத்தக்க சேதிகளையா எதிர்பார்க்க முடியும்!

பாட்டாளி மக்கள் படும் தொல்லைகளைக் காணச் சகிக்காத மாவீரன் லெனின், மார்க்ஸின் சித்தாந்தத்தை ஒட்டிப் புதிய கொள்கைகளை உருவாக்கினான். உருவாக்கி வைத்த கொள்கைகளை உடனடியாகச் செயல்படுத்த, தனது நாட்டையே சிவப்பாக்கும் முயற்சியில் ஈடுபட்டான். புதிய ரஷ்யா பிறந்தது! உலகப் பாட்டாளி மக்களின் ஆதர்ச பூமியாக, முதலாளித்துவப் பேரிருளில் தனிச்சுடர் விட்டுப் பிரகாசிக்கும் ஒற்றை நட்சத்திரமாக அது திகழ்ந்தது!

பஞ்சத்தையும், பசியையும், பட்டினியையும் மட்டுமே அனுபவித்து அனுபவித்து பழகிப் போய்விட்ட ஏழைகள், தங்கள் வாழ்வின் வளத்தையே குறிக்கோளாகக் கொண்டு உருவாகும் அரசை அமைக்க வழிகாட்டிய ரஷ்யாவைப் போற்றினார்கள்; புகழ்ந்தார்கள். தங்கள் நாடுகளையும் ரஷ்யாவாக்க முயன்றார்கள். சில நாடுகள் தீவிரமான முயற்சிகளுக்குப் பிறகு பாட்டாளிவர்க்க அரசுகளை நிறுவின. குறிப்பிடத்தக்க சில நாடுகள் கம்யூனிஸ்ட் நாடுகளாக 'ஞானஸ்நானம்' பெற்றுக்கொண்டன.

லெனின் மாண்டான்! ரஷ்யாவுக்கு மட்டுமல்லாமல், உலகப் பாட்டாளி மக்களுக்கே தலைவனாக விளங்கிய அந்த ஜீவன் கண்களை மூடிக்கொண்டது! பிறகுதான் 'சொர்க்கபூமி' புதுப் பூமியாக உருவெடுக்கத் தொடங்கியது!

ஸ்டாலின் ஆட்சிக்கு வந்தார்!

கம்யூனிஸத்தைக் கொள்கையாகத் தந்த மார்க்ஸையும், அதனை நிலை நிறுத்திய லெனினையும்விடப் 'பெரியவ'ராக ஸ்டாலின் வர்ணிக்கப்பட்டார்!

ஸ்டாலினிஸம் உருவாகி ஒளிவிட்டது! சித்தாந்தங்களில் தீவிரமான மாறுதல்கள் ஏற்படாவிட்டாலும், நடைமுறையில் மகத்தான மாறுதல்கள் உருவெடுத்தன.

ரஷ்யாவைச் சுற்றி இரும்புத்திரை அமைக்கப்பட்டது!

அகில உலகத்திலும் உள்ள காம்ரேடுகளுக்கும் மூலஸ்தானமாக ரஷ்யா விளங்கத் தொடங்கியது; அதன் ஈடு இணையற்ற கடவுளாக ஸ்டாலின் பிரகாசித்தார்!

லெனினின் வலதுகரமாக விளங்கிய அறிஞன் ட்ராட்ஸ்கி படுகொலை செய்யப்பட்டான்!

தொடர்ந்து நாள்தோறும் கொலைகள்! வேளைதோறும் துப்பாக்கிக் குண்டுகளின் பயங்கர ஒலிகள்!

ஸ்டாலினின் கருத்துக்களை எதிர்த்துப் பேசியவர்கள்கூட அல்ல, எதிர்ப்பவர்கள் என்று சந்தேகிக்கப்பட்டவர்கள் கூட, சாக்காட்டுக்கு வழியனுப்பிவைக்கப்பட்டார்கள்!

உலகெங்கும் உள்ள ஜனநாயக வாதிகள் கண்ணீர் வடித்தார்கள்! 'அழுது கண்ணீர் வடித்தாலும், அதிலோர் எழுத்தை மாற்றிடுமோ!'

ஸ்டாலினின் மரணத்துக்குப் பிறகு மாலங்கோவ் வந்தார்!

ஸ்டாலினின் பிணத்தோடு, அவர் கையாண்ட சர்வாதிகாரக் கொள்கையும் புதைக்கப்பட்டுவிட்டதாகப் பறையறிவிக்கப்பட்டது. அறிவிப்பு ஒலியின் அலைகள் உலகெங்கும் பரவுமுன், பயங்கரமான ஒலி ஒன்று அதை முந்தி வந்து நின்றது.

டுமீல்!

ஸ்டாலினின் வாரிசுகளில் ஒருவராகக் கருதப்பட்ட பெரியா சுட்டுக் கொல்லப்பட்டார்!

பெரியாவைப் பின்பற்றிப் பலர் 'அங்கே'யே அனுப்பிவைக்கப்பட்டனர்!

உடனேயே புதுப்புது அறிவிப்புகள்!

மாலங்கோவ் விலக்கப்பட்டார்—அல்லது விலகிக்கொண்டார்!

கட்சியின் செயலாளரான 'புண்ணியவான்' குருஷேவ், தொண்டையைச் சரிப்படுத்திக்கொண்டு பேசினார்:

'ஸ்டாலின் அயோக்கியன்! அக்கிரமக்காரனான அந்த சர்வாதிகாரி தவறுசெய்யவே ஜென்மமெடுத்தவன்! அவன் பாதையில் நடந்தோரெல்லாம் தண்டிக்கப்பட்டு விட்டார்கள்! நாம் புதுப்பாதை வகுப்போம்; பூரிப்போடு அதில் நடப்போம்!'

மார்ஷல் புல்கானின் பிரதமரானார்!

ரஷ்யாவின் புதிய கொள்கையை உலகெங்குமுள்ள 'காம்ரேடு'கள் மேளம் கொட்டினர்!

'ஆஹா, அற்புதம்! பாருங்கள்; பாருங்கள், கலியுக அதிசயத்தை! செய்த தவறை ஒப்புக்கொண்டு, புதிய சிந்தனைக்குத் துணிந்து செல்ல எங்களைப் போல் யாருண்டு? இனி ரஷ்யாவில் சர்வாதிகார முடைநாற்றம் வீசாது; ஜனநாயக மணம் கமழும்!'—என்று அந்த 'பிரச்சாரப் பீரங்கி'கள் முழங்கின.

உலகம் நம்பியது!

நம்பும் வகையில் நாடாண்டுகொண்டிருந்த நாயகர்களான குருஷேவும், புல்கானினும் நடந்துகொண்டார்கள்.

கம்யூனிஸத்தின் காலடிகளைக் கண்டு பயந்து ஓடும் நாடுகளிலிருந்து, 'கம்யூனிஸ்டுகளைக் கருவறுப்போம்' என்று முழங்கும் நாடுகள் வரை பவனி வந்தார்கள். அந்தந்த நாடுகளிலும், அங்கங்குள்ளவர்களைப்போல உடை மாற்றிக்கொண்டார்கள். இந்தியாவுக்கு வந்து, காந்திக்குல்லாயை மாட்டிக் கொண்டார்கள்; தாங்கள் நாத்திகர்கள் என்பதையும் மறந்து பொட்டிட்டுக் கொண்டார்கள்!

உலகம் வியந்தது!

'அடேயப்பா, எவ்வளவு நல்லவர்கள்! இவர்களையும் நாம் ஸ்டாலினாக எண்ணியது மாபெரும் தவறு! ரஷ்யா உண்மையாகவே புது உருவம் பெற்றுத்தான் விட்டது!'

—உலக மக்களின் கருத்துக்கள் இப்படி மாறின.

திடீரென்று இன்னொரு அறிவிப்பு!

புல்கானின் விலக்கப்பட்டார்! குருஷேவே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுவிட்டார்!

ஜனநாயகவாதிகள் கொஞ்சம் சந்தேகத்தோடு திரும்பினார்கள்.

இப்போது சந்தேகம் உறுதிப்பட்டுவிட்டது. வரிசையாகச் சேதிகள் வருகின்றன:

"பாஸ்டர்நாக் பயமுறுத்தப்பட்டார்!

மாலங்கோவ் சுட்டுக் கொல்லப்பட்டார்!

ரஷ்யாவின் உதவி வெளி நாட்டிலாகா அமைச்சர் ஜார்ஜி ஜரூபின் மரணமடைந்தார்!

மார்ஷல் புல்கானின் மரணப்படுக்கையிலிருக்கிறார்!"

தனது எதிரிகளை ஏதாவது காரணம் காட்டி ஒழித்துக்கட்டும் 'திருப்பணி', ஸ்டாலினோடு முற்றுப்பெற்று விட்டது, என்று எண்ணிக்கொண்டிருந்தவர்களின் 'நப்பாசை'யில் மண்விழச் செய்து விட்டார் 'புதிய ஸ்டாலின்' குருஷேவ். ஸ்டாலின் ஆட்சிக்கு வந்ததும் நடைபெற்ற எல்லாக் காரியங்களும் முறையாக இப்போதும் நடக்கின்றன. வழக்கமான அதே பாதையில் குருஷேவ் 'ராஜநடை' போடுகிறார்.

என்றாலும் நமது 'காம்ரேடு'கள் குருஷேவைக் குறைகூற மறுக்கிறார்கள்; தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளின் 'பிராவ்டா'வான 'ஜனசக்தி' மௌனம் சாதிக்கிறது!

மாலங்கோவின் படுகொலைபற்றி ஒரே ஒரு நாள், "இது முதலாளித்துவப் பத்திரிகைகளின் 'கோயபல்ஸ்' வேலை! இப்படித்தான் முன்பு ஒரு முறை சொன்னார்கள். உடனேயே குருஷேவ், 'நேரில் வந்து பாருங்கள்; இதோ இருக்கிறார் மாலங்கோவ்!' என்றார். அதைப்போலத்தான் இப்போதும்!" என்று எழுதி 'ஜனசக்தி' தன்னைத் திருப்திப்படுத்திக்கொள்ள முயன்றது.

ஆனால், பாவம்! 'ஜனசக்தி'யின் இந்தக் கூற்றைச் சிறு அளவு கூட ஒப்புக்கொள்ள முடியாமல் செய்து விட்டார் குருஷேவ்! அவர் இதுவரை மாலங்கோவ் சுட்டுக் கொல்லப்பட்டதை மறுத்து, கண்துடைப்புக்காக ஒரு சிறு அறிக்கைகூட வெளியிட்டதாகத் தெரியவில்லை! எனவே, மாலங்கோவின் படுகொலை குருஷேவாலேயே உறுதிப்படுத்தப்பட்டு விட்டது!

இன்னும், வெகு சீக்கிரத்திலேயே இப்போது படுக்கையிலிருப்பதாகச் சொல்லப்படும் புல்கானின் மரணமடைந்துவிட்டதாகச் சேதிவரும்! அவரோடு சதிவேலையில் ஈடுபட்டதாகக் கற்பிக்கப்படும் மாலட்டோவ், ஜுகாவ், காகனோவிச், ஷெபிலோவ் ஆகியோர் 'திடீர் விபத்து'க்குள்ளானதாக அறிவிக்கப்படும்! அவர்களைத் தொடர்ந்து ஒரு பெருங்கூட்டமே 'கூண்டோடு கைலாசம்' போகும்!

என்ன செய்வது, கம்யூனிஸ ஆட்சியல்லவா நடக்கிறது ரஷ்யாவில்!

இனி இங்குள்ள காம்ரேடுகள் என்ன வித்தை காட்டப்போகிறார்களோ? 'ஜனசக்தி' எப்படிச் சப்பைக்கட்டுக் கட்டப்போகிறதோ?

ஆனால் நமக்கு மட்டும் ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது:

'கம்யூனிஸ்டுகளுக்கு இது அழிவுகாலம்! என்னதான் தலைகீழாக நின்று பார்த்தாலும், இனி மக்கள் அவர்களை நம்பமாட்டார்கள்; இது திண்ணம்!'

வெண்பாப் போட்டி-32.

ஈற்றடி:

மல்லிகைக்கும் உண்டோ மணம்.

முடிவு தேதி: 13-12-'58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

ஊமையன் கோட்டை

கண்ணதாசன்

சின்னமருது பாண்டியர் பாளையங்கோட்டைக்கு எப்படி வந்தார்?

தேவரின் கேள்வி வீரத்தேவனுக்கு ஆச்சரியத்தை அளித்தது.

'அவர் வந்திருக்கிருரா?' என்று அவரையே திருப்பிக் கேட்டான்.

'அதிகாலையிலேயே வந்துவிட்டோம். அவர்கூடத்தான் நாங்கள் வந்தோம். எங்களை இங்கே உட்கார வைத்துவிட்டு விறகு வெட்டியின் வேடத்தில் சின்னப் பாண்டியர் புறப்பட்டார்' என்று விளக்கம் கொடுத்தார் தேவர்.

வீரத்தேவனுக்குச் சொல்லவொண்ணுத உணர்ச்சி ஏற்பட்டது. சவுக்காலடித்த வெள்ளையனை வெட்டி எறிந்தவர் அவர் தானே? அசப்பிலே பார்த்த காட்சியை மீண்டும் மனக் கண்ணுக்குக் கொண்டு வந்தான் வீரத்தேவன்.

'ஐயோ, அவர் அகப்பட்டுக் கொள்ளாமலிருக்க வேண்டுமே!'—அவன் மனம் துடித்தது.

கூட்டத்தினரையும், ஊமைத்துரையையும் விட்டுவிட்டு, தேவரையும், அஞ்சுகத்தையும் தனியாக அழைத்துச் சென்ருன் வீரத்தேவன்.

'என்ன தம்பி, சொல்லாமக் கொள்ளாம வந்துட்டே!' என்று கேட்டார் தேவர்.

'அன்றைக்கெல்லாம் என் மனது சரியாகவே இல்லை; அதனுல்தான் புறப்பட்டுவிட்டேன். ஆமாம், சின்னப் பாண்டியர் எதற்காக வந்தார்?'

'நீ அவசரக்காரனுக இருந்தால், எல்லோருமா அப்படி இருப்பார்கள்! பெரியபாண்டியர் வெல்லைப் பார்க்கப் போன கால்நாழிகைக்கெல்லாம் சின்னவர் வந்துவிட்டார். வந்தவுடனே உன்னைத்தான் கேட்டார். அரண்மனையெங்கும், ஊரெங்கும் தேடித்தேடி அலைந்தேன். பணத்திற்குக்கூட அவர் ஏற்பாடு செய்துவிட்டு வந்திருந்தாராம். கொஞ்சநேரம் நீ தாமதித்திருந்தால் அவரைப் பார்த்திருக்கலாம். உன்னைக் காணவில்லை என்பதைச் சொன்னதும், மிகவும் வருத்தப்பட்டார். அவருடைய குணம் உனக்குத் தெரியாது. ஒன்றைச் செய்வது என்று தீர்மானித்துவிட்டால், தாமதமில்லாமல் செய்துவிடுவார். பெரிய பாண்டியர் யோசித்த அளவுக்குக்கூட அவர் யோசிக்கவில்லை. உடனேயே என்னைத் தனியாக அழைத்துக் கொண்டு போய், சிறையை உடைக்கப்போகும் நாள் பற்றிக் கேட்டார். சொன்னேன். 'அன்று நாமும் புறப்படுகிரேம்' என்ருர். அஞ்சுகமும் உன்னைப் பார்க்க வேண்டுமென்றதால் அவளையும் அழைத்துக்கொண்டு வந்தோம். முக்குளத்துக்குப் போவதாகப் பெரியபாண்டியரிடம் சொல்லிவிட்டு, எங்களை அழைத்துக் கொண்டு இங்கே வந்தார்.'

வீரத்தேவன் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. ஒரு மண்ணிலே பிறந்த பாசம் யாரைத்தான் விட்டுவிடும்! எட்டையபுரம், மணியாச்சி, புதுக்கோட்டை பாளையக்காரர்களிடம் கூட துரோகபுத்திக்கிடையேயும் தேசபக்தி இருக்கிறதே! துரோகிகளின் நரம்பிலேயும் பாசப் பிடிப்பு இருக்கும்போது, தளராத நாட்டுப் பற்றும் ஆண்மையும் கொண்ட மருதுபாண்டியர்களிடம் இல்லாமலா போகும்!

அப்பொழுதே சின்னப்பாண்டியரைப் பார்த்துவிடத் துடித்தான் வீரத்தேவன். எங்கே இருக்கிருரோ, எப்படி இருக்கிருரோ?-அவன் மனம் பதைத்தது. மீண்டும் பாளையங்கோட்டைக்குள் செல்லமுடியாது. நகரெங்கும் வெள்ளைப்படைகள் கடுங்கோபத்துடன் உலாவிக் கொண்டிருக்கும். பொம்மையா, சிங்கத்தேவன் முதலியோரும் எங்கெங்கே இருக்கிருர்களோ?

திகைத்து நின்ற அவனுடைய முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள் அஞ்சுகம்.

'இப்படியே காட்டு வழியாகவே போய், நம் ஆட்கள் எல்லோரையும் நான் சந்தித்துவிட்டு வரட்டுமா?' என்று கேட்டாள்.

வீரத்தேவன் அதை விரும்பவில்லை.

'கோபத்தோடு உலவும் வெள்ளைக்காரர்கள் வழியில் போகிறவர்களையெல்லாம் பிடித்து அடைக்கக்கூடும்! நீ, போக வேண்டாம்!' என்று அஞ்சுகத்துக்குப் பதில் சொன்ன வீரத்தேவன், திரும்பி ஊமைத் துரையிடம் வந்தான்.

'சிங்கத்தேவர், பொம்மையா, சின்னமருது பாண்டியர் இவர்களைச் சந்திக்க வேண்டும். என்ன செய்யலாம்?' என்று கேட்டான்.

சின்னப்பாண்டியர் வந்திருப்பதுபற்றி ஊமைத்துரை ஆச்சரியத்தோடும், ஆவலோடும் விசாரித்தார். முன்பு தேவர் சின்னப் பாண்டியரைப் பற்றி விசாரித்தது, புரட்சிக்காரர்களின் ஆரவாரத்திடையே அவருக்குக் கேட்கவில்லை. தான் சிவகெங்கை சென்றதிலிருந்து நடந்தவற்றை விவரமாகச் சொன்ஞன் வீரத்தேவன். ஊமைத்துரையின் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்தது. மறவர் நாட்டின் அரசு நெறிகளை அவர் அறிவார். கிழக்கு வட்டகைப் பாளையக்காரர்களைவிட, மேற்கு வட்டகைப் பாளையக்காரர்கள் வீரம் மிக்கவர்கள். அவர்களையும்விட இராமநாதபுரம், சிவகெங்கை மறவர்கள் பண்பு மிக்கவர்கள். அங்கே சில்லறைக் குழப்பங்கள் வருவதில்லை. தினமும் ஒரு பகைவனைச் சமாளிக்க வேண்டிய தொல்லை, பாஞ்சாலங்குறிச்சிக்கு இருந்தது. அதனுல் பொது எதிரியைமட்டுமே சமாளிக்க வேண்டிய அளவுக்கு இனக் கட்டுப்பாடு மறவர் நாட்டில் இருந்தது. சின்னப்பாண்டியர் தனக்கு உதவ வந்திருக்கிருரென்ருல், சிவகெங்கையே உதவுவதாகத்தான் பொருள். சிவகெங்கையின் எழுபத்தையாயிரம் படை வீரர்களும் தன் அருகில் இருப்பதுபோல் தோன்றிற்று அவருக்கு. ஊமைத்துரையின் நாடி நரம்புகளில் புது உணர்ச்சி பாய்ந்தது. வீரத்தேவனைப் பார்த்து, 'நாம் எல்லோருமே புறப்படுவோம். காட்டுப் பாதையிலேயே தேடிக் கொண்டு போவோம்' என்ருர்.

வீரத்தேவனுக்கும் அது சரி என்று பட்டது. காயங்களுக்குக் கட்டுப் போட்டுக் கொண்டிருந்த புரட்சிவீரர்களும், அவசர அவசரமாக எழுந்து புறப்பட்டார்கள்.

பாளையங்கோட்டை நகருக்குள்ளே நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. சந்தேகத்துக்கிடமாகத் தோன்றுபவர்களையெல்லாம், வெள்ளையரின் வீரர்கள் பிடித்தார்கள். கயிறுகளால் பிணைத்து, ஆங்காங்கே உள்ள மரங்களில் கட்டினுர்கள். சிறை உடைப்பில் ஈடுபட்டு, அகப்பட்டுக்கொண்டவர்களை நையப்புடைத்தார்கள். கூட்டமாக நிற்பவர்களைக் குதிரைப் படைகள் கலைத்தன.

சின்னப்பாண்டியரும், சில வீரர்களும் வெள்ளையரிடமிருந்து தப்பி, மதுரைப் பாதையை நோக்கிப் போய்விட்டார்கள். சிங்கத்தேவனும், பொம்மையாவும் கைப்பற்றிய துப்பாக்கிகளோடு ஒட்டப்பிடாரம் நோக்கிப் போய்விட்டார்கள். சுப்பம்மாளும் சில பெண்களும் மேற்குத்திசைக் காட்டுக்குள் புகுந்துவிட்டார்கள். இந்த நிலையில், கயத்தாற்றுப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த படைகளையெல்லாம் வெள்ளைக்காரர்கள் பாளையங்கோட்டைக்கு அழைத்துக் கொண்டார்கள்.

காட்டு வழியாகப் புறப்பட்ட ஊமைத்துரை குழுவினர், முதன் முதலாக சுப்பம்மாள் குழுவினரைச் சந்தித்தார்கள். அங்கிருந்து மேலும் நடந்து ஒட்டப்பிடாரம் எல்லைக்கு வந்தபோது, சிங்கத்தேவன், பொம்மையா குழுவினர் காணப்பட்டார்கள். அவர்களைக் கண்டதும்தான் வீரத்தேவனுக்கு உற்சாகம் பிறந்தது. ஏறக்குறைய முன்னூறுக்குமேற்பட்ட துப்பாக்கிகள் அவர்களிடமிருந்தன. துப்பாக்கிகள் இருந்தனவே தவிர கருமருந்து இல்லை. மருந்துக்காக ஒட்டப்பிடாரம் வெடிமருந்துக்கிடங்கைத் தாக்குவதென அவர்கள் முடிவு கட்டினுர்கள். புரட்சி வீரர்கள் அனைவரும் உற்சாகமாகவே இருந்தனர். சின்னப்பாண்டியர்

என்ன ஆனார் என்பது தெரியாததுதான், வீரத்தேவனுக்குக் கவலையை அளித்தது. பொம்மையா சொன்ன செய்தியிலிருந்து, சின்னப்பாண்டியர் தப்பித்துவிட்டது மட்டும் புலனாயிற்று.

அந்திபட்டு விட்டது. ஏறக்குறைய இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட அந்தப் புரட்சிவீரர்கள், ஒருமுகமாக இரைச்சலிட்டுக்கொண்டு, ஒட்டப்பிடாரம் வெடியருந்துக் கிடங்கை நோக்கிப் பாய்ந்தார்கள். பாளையங்கோட்டைப் புரட்சியைப் பற்றி அப்பொழுதுதான் கேள்விப்பட்டிருந்த ஒட்டப்பிடாரத்து மக்களும் இதில் உற்சாகமாகக் கலந்துகொண்டனர். கிடங்கில் அதிகமான காவல் இல்லை. சுற்றிநின்ற அறுபது பேர்களைக் கொல்வது புரட்சி வீரர்களுக்குச் சுலபமாக இருந்தது. ஆனால், கிடங்கின் சுவரை உடைப்பது கடினமாகிவிட்டது. பதினாறடி கனமிருந்த அந்தச் சுவரை மிகவும் கஷ்டப்பட்டு, புரட்சி வீரர்கள் தகர்த்தார்கள். எல்லாத் துப்பாக்கிகளிலும் மருந்தை நிரப்பிக்கொண்டார்கள். ஓலைப் பெட்டிகளிலும் மருந்தை அள்ளிக்கொண்டார்கள். திட்டமிட்டபடி, இரவோடு இரவாகப் பாஞ்சாலங்குறிச்சிக்குப் போக முடிவு கட்டினார்கள்.

அஞ்சுகம் மிகவும் களைத்துப் போயிருந்தாள். கையிலிருந்த குதிரைகளிலொன்றில், அவளும், வீரத்தேவனும் ஏறிக்கொள்ளும்படி வற்புறுத்தினார் ஊமைத்துரை. தானும் ஒரு குதிரையில் ஏறிக்கொண்டார். கையில் மருந்து இருந்ததால், யாரும் தீப்பந்தங்கள் ஏந்த வேண்டாம் என்று கட்டளையிட்டார். இருளிலேயே எல்லோரும் பாஞ்சாலங்குறிச்சி நோக்கிப் புறப்பட்டார்கள்.

9

மறவர் மகள் புறப்பட்டாள் !

நகரில் நடந்தவற்றையெல்லாம் வீட்டிலிருந்தே கேள்விப்பட்ட கண்ணுத்தாள், தன் கணவன் என்ன ஆனான் என்பதைத் தெரிந்துகொள்ளப் புறப்பட்டாள். நகரில் நின்றுகொண்டிருந்த மக்கள் பேசிய பேச்சிலிருந்து, எல்லோரும் பாஞ்சாலங்குறிச்சிக்குத் தான் போயிருக்க முடியுமென முடிவு கட்டினாள். கதிரவன் படியு முன்பே நகரை விட்டு வெளியேறினாள். பாஞ்சாலங்குறிச்சியை நோக்கிப் புறப்பட்டாள். வழியில் எதிர்ப்பட்ட ஒரு வெள்ளைப்படை அவளைப் பிடித்துக்கொண்டது. யார் அவள்? என்று விசாரித்தது. அவள் தயக்கமின்றிப் பதில் சொன்னாள். வெள்ளையர்கள் அவளை விட்டுவிட்டார்கள். தைரியம் மிகுந்தவளாய், அவள் மேலும் நடந்தாள். பாஞ்சாலங்குறிச்சிக்கு மூன்றுவது கல்லில் ஒரு சிறிய கிராமம். அங்கு ஐந்தே வீடுகள். ஒரு வீட்டைத் தவிர, பாக்கி நான்கும் குடிசைகள். அந்தப் பெரிய வீட்டின் தலைவன் சென்னகேசவ நாயக்கன் என்பவன் வெள்ளையர்களுக்கு உளவு சொல்வதில் பேர்போனவன். பாஞ்சாலங்குறிச்சியாரும் சந்தேகப்படாமல் நடந்துகொண்டவன். கட்டபொம்மனுக்கு ஓரளவு கட்னும் கொடுத்து வந்தவன். இங்கே கடன் கொடுப்பான்; அங்கே உளவு சொல்வான். சுற்றுவட்டத்தில் ஆறு ஏழு கிராமங்கள் வரை அவனுக்குச் சொந்தம். அவனது வீட்டின் வாசலுக்கு வந்தாள் கண்ணுத்தாள். வெளியிலே தெரு விளக்கு மினுக்கிட்டுக்கொண்டிருந்தது. ஒரு மூலையில் நான்கு கம்பளத்தார்கள் உட்கார்ந்து சுருட்டுப் புகைத்துக்கொண்டிருந்தார்கள். கண்ணுத்தாள் அந்த முன் திண்டின்மீது வந்து அமர்ந்தாள். கடந்து வந்த களைப்போடு, பசியும் தோன்றிற்று. ஆனாலும், அவள் அதை வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. பாஞ்சாலங்குறிச்சிக்கு ஊமைத்துரையும் குழுவினரும் வந்துவிட்டார்களா என்பதையும், அங்கு ஏதாவது நடந்துகொண்டிருக்கிறதா என்பதையும் அந்தக் கிராமத்திலேயே தெரிந்துகொள்ள அவள் விரும்பினாள். அங்கிருந்த நால்வரிடம் கேட்கலாமா என்றெண்ணினாள். அவர்கள் நால்வரும் தங்களுக்குள் தெலுங்கில் ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். அவள் கேட்பதற்குள், அவர்களிலே ஒருவன் அவளைப் பார்த்து, 'யாரம்மா நீ?' என்றான்.

'எனக்குச் சொந்தஊர் நாட்டரசன்கோட்டை ஐயா! அங்கே தான் போய்க் கொண்டிருக்கிறேன்!' என்றாள்.

ஒருவன் அவளைக் கூர்ந்து கவனித்தான்.

'இப்படித் தனியாப் போகலாமா, அம்மா?' என்று ஒருவன் கேட்டான்.

'நான் ஒரு ஏழை. என் தந்தைக்கு உடல் நலமில்லை. என்னைப் பாளையங்கோட்டையில் கொடுத்திருக்கிறார்கள். இரவுக்குள் நான் நாட்டரசன் கோட்டை போய்ச் சேரவேண்டும்; இல்லையென்றால் நான் என் தந்தையை உயிரோடு காண முடியாது!' என்று ஒரு பொய்யைச் சொன்னாள் அவள்.

'ஐயோ, பாவம்!' என்று அனுதாபப்பட்டார்கள் அவர்கள்.

'ஏனய்யா! பாளையங்கோட்டையில் ஏதோ புரட்சியாமே! சிறைச்சாலையை உடைத்து, ஊமைத்துரையை விடுதலை செய்துவிட்டார்களாமே! உங்களுக்கு ஏதாவது தெரியுமா?' என்று கேட்டாள்.

'ஆங்...அதுவேற நடக்குமா? கம்பளத்தானெல்லாம் இப்ப செத்துப்போய்க் கெடக்கான். சிறைச்சாலை என்ன கடலைக் கொட்டையா, உடைச்சு எறியறதுக்கு. தினசரி வழியில போறவங்க ஏதாவது புழுகிக்கிட்டிருப்பாங்க. வெள்ளைக்காரன் பீரங்கிக்கு முன்னால இனி எதுவும் நடக்காது.' என்றான் ஒருவன்.

'அப்படியே சிறையை ஒடச்சுத்தான் இனி என்ன கிழிக்கப் போறாங்க! எல்லாப் பயலும் சோத்துக்கில்லாம சாகிறான்; இனி எங்க சண்டைபோட வரப் போறான்! ஊமைத்துரை சிறைச்சாலையிலேயே செத்துப்போவான். உள்ளேயே பொதச்சிருவாங்க; பொணத்தைக்கூடக் காட்டமாட்டாங்க!' என்றான் இன்னொருவன்.

'இனி இந்த வீட்டு ஐயா தான் பாஞ்சாலங்குறிச்சியை ஆளப்போறாரு. வெள்ளைக்காரங்க வந்து ரொம்பக் கெஞ்சிக்கிட்டிருக்காங்க. இவர்தான் முடியாதுண்ணு சொல்லிக்கிட்டிருக்காரு!' என்றான் மற்றொருவன்.

அந்தப் பரிதாபத்திற்குரியவர்களை அனுதாபத்தோடு கவனித்தாள். நாட்டு நிலைமையைப்பற்றி இவர்கள் எவ்வளவு தெளிவாகக் கணக்குப் போட்டிருக்கிறார்கள்! ஒரு காரியம் நடந்து முடிந்ததற்குப் பின்னாலேகூட அப்படிநடக்கும் என்ற எண்ணம் இவர்களுக்கில்லையே! ஒரு இனத்துக்குள்ளேயே இப்படி இருந்தால், வருகிறவர்களுக்கு ஏன் ஏளனமாகத் தோன்றாது!

அவள் சிந்தனையில் ஆழ்ந்தாள்.

திடீரென்று வீட்டின் கதவு திறக்கப்பட்டது. உயரமாக இருந்த ஒருவர் வெளியிலே வந்தார். அவரைப் பார்த்ததும், அந்த நால்வரும் சுருட்டைக் கீழே போட்டுவிட்டுக் கைகளைக் கட்டிக்கொண்டு எழுந்து நின்றார்கள். உட்கார்ந்திருந்த கண்ணுத்தாளை அவர் கவனித்தார், விசாரித்தார். பழைய பொய்யையே திருப்பிச் சொன்னாள் கண்ணுத்தாள்.

'வாம்மா, சாப்பிட்டுவிட்டுப் போகலாம்' என்று அவர் அவளை உள்ளே அழைத்தார்.

'தைரியமாப் போம்மா; சாப்பிட்ட உடனே வண்டி கட்டிக்கொண்டு போய் விடுறோம்' என்று சிபாரிசு செய்தார்கள் அவர்கள்.

கண்ணுத்தாள் தயங்கினாள். அவர்கள் மிகவும் அன்போடு பேசினார்கள். நம்பிய கண்ணுத்தாள் வீட்டுக்குள்ளே நுழைந்தாள். அவளை மாடியில்கொண்டு போய் உட்கார வைத்துவிட்டு, கீழே வந்து கதவைத் தாழிட்டார் அவர். வெளியிலிருந்த நால்வரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

அடுத்த இதழில்...

கலைவாணர் மீது

கண்ணதாசன்

எழுதிய

வில்லுப் பாட்டு

வரும்.

'மனோன்மணீயம்'—ஒரு கருத்து

"மனோன்மணீயம் நடிப்பதற்கேற்ற ஒரு நாடகமன்று" என்று சிலர் கருதுவதாகவும், நடிப்பதற்கேற்ற நாடகமே என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்றும் 'தென்றல்' வாசகர் ஒருவரிடமிருந்து முடங்கல் ஒன்று வந்துள்ளது. **"மனோன்மணீயம் நடிப்பதற்கேற்ற நாடகமே"** என்ற கருத்தை வலியு[illegible]தும் விபரங்கள் நிறைந்த கட்டுரையை, வாசகர்களிடமிருந்து 'தென்றல்' எதிர்பார்க்கிறது. வாசகர்கள் அத்தகு கட்டுரையை எழுதியனுப்ப வேண்டுகிறோம்.

(ஆ-ர்)

புலித்தேவனா, கட்டபொம்மனா?

6

கான் சாகிபு அஞ்சா நெஞ்சம் படைத்தவன். அடுத்து வருவது பற்றி ஆலோசனை செய்யாமல், நினைத்ததை நினைத்தபடி செய்து முடித்துவிடும் துணிவு கொண்டவன். 'இரும்பு மனிதன்' என்றும், 'பேய் உள்ளம் படைத்தவன்' என்றும் வர்ணிக்கப்படுபவன். அந்தக் காலத்தில், 'கான் சாகிபு கம்பந்தான்' என்ருல் மக்கள் வெருண்டோடுவார்களாம். பிறருக்கு அச்சமூட்டும் எல்லாச் செயல்களுக்கும் அவன் பிதா மகனுகத் திகழ்ந்தான். பிற்காலத்தில் அவனை விடுதலை வீரன் என்று சொன்னவர்களும் உண்டு.

கான் சாகிபு சிவில்லிபுத்தூர் வந்த சேதி அறிந்த புலித்தேவன் விழித்துக்கொண்டான். பலம் பொருந்திய கான் சாகிபுவைக் களத்தில் சந்தித்தால் ஏற்படும் விளைவை எண்ணிப் பார்த்தான். திரும்பவும் போரில் தோல்வியடைவது, அல்லது வரவேற்று சமரசம் பேசுவது - இரண்டிலுமுள்ள லாப நட்டங்களைக் கணக்குப் போட்டுப் பார்த்தான். கடைசியில், தம் பிரதிநிதிகளை அவனிடம் அனுப்பி, சமரசம் பேசி அவன் திரும்பிச் செல்ல ஏற்பாடு செய்துவிட்டான் புலித்தேவன்.

இங்கிலையில் திருநெல்வேலிச் சிமையில் புதியதொரு நிலை ஏற்பட்டது. ஆற்காட்டு நவாபு தங்களுக்குத் தரவேண்டிய கடன் தொகைக்குப் பதில், அவனுக்கு அடங்கியிருக்கும் பாளையங்களில் வரிவசூல் செய்யும் உரிமையைப் பெற்றுள்ள ஆங்கிலேயர், நெல்லைச் சிமைப் பாளையங்களில் வரிவசூல் செய்யும் உரிமையைக் குத்தகைக்கு விட்டனர். அழகப்ப முதலியார் என்பவர் குத்தகைக்குப் பெற்று, ஆங்கிலக் கம்பெனிக் கொடியுடன் வசூல் செய்யப் புறப்பட்டார். அதுவரை நவாபுவின் ஆளுகைக்குள் கொண்டுவரப் பாடுபட்ட மாபூஸ்கான், அதைக் கண்டு ஆத்திரப்பட்டான். 'நானே குத்தகைக்காரன்' என்ருன்.

மாபூஸ்கானின் இந்த நடவடிக்கை புதிய தொல்லையை உருவாக்கியது. மாபூஸ்கானிடமும், குத்தகை முதலியாரிடமும் சேர்ந்து ஒரே நேரத்தில் அவதிப்பட்டார்கள் பாளையக்காரர்கள். அவதியோடு அவர்களுக்கு ஏற்பட்ட அவமானமும் ஏராளம். இவற்றின் விளைவு பாளையக்காரர்களை ஒரே அணியில் திரட்ட உதவியது. திருவாங்கூரான், மீதியுள்ள பிற பட்டாணியர், புலித்தேவன் ஆகியோர் ஒன்றுபட்டனர். மாபூஸ்கானிடம் விரோதம் பாராட்டினுல், ஒரே நேரத்தில் இரண்டு எதிரிகளிடம் போராட வேண்டிய தொல்லைகளை உணர்ந்த அவர்கள், இருவருள் யாராவது ஒருவரைமட்டுமே எதிர்க்கத் திட்டமிட்டனர். புலித்தேவனின் அரசியல் தந்திரம் நல்ல முறையில் வேலை செய்தது. ஆங்கிலேயருக்கு எதிரான அந்த அணியில் மாபூஸ்கானும் சேர்ந்துகொண்டான். இப்பொழுது எல்லோரும் ஒரே அணியில் நின்று, ஒரே குரலில் முழங்கினர்: 'கும்பினியரை முறியடிப்போம்!'

பாளையக்காரர் படை திரண்டது. அதிலே பதினுயிரம் பேர் இருந்தனர். பாஞ்சாலங்குறிச்சி வழி திருநெல்வேலி நோக்கிச் சென்றது படை. ஒரே நொடியில் நெல்லை நகர் அதன் கைக்குள் அடங்கியது.

செய்தி காட்டுத் தீயெனப் பரவியது. அழகப்ப முதலியார் துடித்துப் போனுர். மதுரையிலிருந்து கான் சாகிபு ஓடோடி வந்தான். படை திரட்டினுன். கங்கைகொண்டானுக்கு அருகில் பெரும் போர் நடந்தது. முடிவில், கும்பினியரின் படையே வெற்றி பெற்றது.

நாளுக்கு நாள் வளர்ந்து வரும் கும்பினியரின் பேராசையோடு, அவர்களின் படையும் வளர்ந்தது. அவர்களை எதிர்க்கத் தங்களிடம் போதிய பலமில்லை என்ற உண்மை பாளையக்காரர்களுக்கு விளங்கியது. தங்கள் பலத்தைப் பெருக்க, தங்கள் பக்கம் அதிக ஆதரவை உருவாக்கிக் கொள்ள ஏதாவது வழி உண்டா என எண்ணிப் பார்க்க ஆரம்பித்தார்கள், அவர்கள். அப்போதுதான் அவர்கள் கண்களுக்கு மாவீரன் ஐதர்அலி தென்பட்டான்.

ஐதர் பேராண்மை மிக்க வீரன். போர் வீரனுக் இருந்து மன்னனுன தனி ஆற்றல் மிக்கவன்; ஆங்கிலேயரை அடியோடு அழித்தொழிக்கத் திட்டமிட்டு வேலை செய்துகொண்டிருந்தான் அவன். அவனேடுஉறவு கொள்ளத் தொடங்கினுர்கள் பாளையக்காரர்கள். இந்த உறவு உதயமாவதற்கும், ஒட்டி நின்றதற்கும்கூட புலித்தேவன்தான் காரணம்; கும்பினியரை ஒழிக்க ஒத்துழைத்தால் ஐந்து லட்சம் ரூபாய் தருவதாக அவன் ஐதருக்குச் செய்தி அனுப்பினுன். மாபூஸ்கான் சோழவந்தான் சிமையைத் தருவதாகச் சொன்னுன். முயற்சியின் வெற்றிக்குப்பின் மதுரையை பழைய நாயக்க மன்னர் பரம்பரையைச் சார்ந்தவனுன விசயகுமாரனுக்குத் தருவதென்றும், மாபூஸ் கானுக்கு (ஐதரின்) மைசூர் நாட்டில் சிறந்த பதவி ஒன்றைத் தருவதென்றும் ஏற்பாடாயிற்று.

ஆங்கிலேயருக்கு, செய்தி எட்டியது படையோடு கான்சாகிபுவும், முதலியாரும் மதுரையைக் காக்க ஓடோடி வந்தனர். நிலைமையைத் தெளிவாக ஆராய்ந்ததில், படை வலிமைபால் அந்தப் பாளையக் கூட்டணியை எதிர்க்கமுடியாது என்பது விளங்கியது அவர்களுக்கு. எனவே, புதிய சூழ்ச்சி ஏதாவது செய்யத் திட்டமிட்டனர், அவர்கள். புலித்தேவனை எப்படியும் தங்கள் கைக்குள் போட்டுக்கொண்டு விட்டால், அந்த எதிர்ப்பணியை முறியடித்துவிடலாம் என முடிவு செய்தனர். இது ஒரு புத்திசாலித்தனமற்ற காரியம் என்பதை சாதாரண அறிவுள்ளவர்களும் புரிந்துகொள்ளமுடியும்! எதிர்ப்பு அணி திரளுவதற்கு முழுக் காரணமாக இருந்த புலித்தேவனையே தங்களின் விபீஷணுக்க அவர்கள் எண்ணியது எவ்வளவு பைத்தியக்காரத்தனம்! எப்படியும் அவர்களை ஏமாற்ற சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் புலித்தேவனுககு இவ்வளவு கிடைத்தால் போதாதா? அவர்களிடம் 'முடியாது' என்றும் கூருமல், 'சரி' என்றும் சொல்லாமல் இப்படியும் அப்படியுமாக ஏமாற்றிகொண்டு வந்தான் அவன். நேரடியாக, தன்னை எதிரி என்று சொல்லிக்கொள்ளாமல், தனது காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் பண்பு அவனுக்கு. அதே பண்பைச் செம்மையாகக் கையாண்டான் அவன். இவர்களிடம் இப்படி நடித்துக்கொண்டிருந்த வேளையில் சிவல்லிபுத்தூரில் அவனுல் அனுப்பப்பட்ட ஆட்கள் கும்பினியரை வேவு பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஒருநாள் எப்படியோ புலித்தேவனுடைய ஆட்களான ஐந்து மறவர்கள் சிவில்லிபுத்தூரில் பிடிபட்டு விட்டனர். அவர்களை உடனேயே பீரங்கி வாயில் வைத்துச் சுட்டு விட்டான் கான்சாகிபு. கான்சாகிபுவின் இந்தச் செயல் புலித்தேவனின் சினத்தை அதிகப்படுத்தியது. அவன் புதிய திட்டம் வகுக்கத் தொடங்கினுன். அதிலே ஒன்று மாபூஸ்கானைத் தனது நெற்கட்டுஞ் செவ்வல் கோட்டையில் தங்கச் செய்வது. அதில் மாபூஸ்கான் தங்குவதன்மூலம் ஆங்கிலேயர் அந்தக் கோட்டையைத் தாக்கத் தயங்குவார்கள் என்பது புலித்தேவனின் எண்ணம்!

★ ப. புகழேந்தி ★

மாபூஸ்கானே, அந்த நேரத்தில் பாளையங்கோட்டையைக் கைப்பற்றுவது தனக்குப் பெரும்பலம் தரும் என்று கருதினுன். அதன்படியே தாக்குதல் நடத்தினுன். அப்போது அந்தக் கோட்டையைக் காத்துவந்த வசவப்ப நாயக்கன் புலித்தேவனின் ஆதரவாளன். தேவனின் பேராதரவு பெற்றுள்ள மாபூஸ்கானை எதிர்க்க அவனுக்குத் துணிவில்லை. அவன் தனக்கு உதவுமாறு கட்டபொம்முவுக்கு அழைப்பு விடுத்தான். சில கிராமங்களையும் அவனுக்குப் பரிசாக அளித்தான். இலாபம் கிடைப்பதைக் கண்ட கட்டபொம்மு, எட்டயபுரம் சேனையுடன் வந்து பாளையங்கோட்டையைக் கைப்பற்றினுன்.

– தொடரும் –

ஜாபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
சங்குபிள்ளை, திண்டுக்கல்ரோடு, மதுரை.

ஜுபிடரின்
அண்ணு பத்தி
JUPITER PERFUMERS
M.S.T.V. NEETHI MOHAN, MADURAI.
எங்கும் கிடைக்கும்

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

செழுமைப்படுத்துவதற்கே பயன்படுத்திக் கொள்கிருராம்! பாட்டாளி வர்க்கத்தவரின் பாது காவலர்கள் பணத்தைப் பங்கு போட்டுக்கொள்வதிலே பங்கப் படுகிருர்கள் என்று சொன்னல் தவறில்லேயே! டாங்கேயின் மீதுள்ள கடைசிக் குற்றச்சாட்டு – அவர் இந்திய சர்க்கார் தொழில் மந்திரியான குல்சாரிலால் நந்தாவினுடைய கையாளாக இருக்கிருர் என்பதாகும்! காரணம் – டாங்கே சில பல நேரங்களிலும் இடங்களிலும் நந்தாவின் தொழிற் கொள்கையை ஆதரித்துப் பேசியிருப்பது தான்! திருவனந்தபுரம் மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில் தோழர் டாங்கே நான்கு முறை கடுமையாகக் கண்டிக்கப்பட்டார் என்ருேர் செய்தி 'இந்து'வில் வெளி வந்தது. இப்போதுதான் குற்றச் சாட்டுக்களே வெளியிலே சொல்லத் துவங்கியிருக்கிருர்கள் – வெகு விரைவில் டாங்கே தண்டிக்கப்பட்டார்; கட்சியிலிருந்து தள்ளப்பட்டார் என்றும் செய்தி வரலாம்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைக் கண்காணித்துக் காப்பாற்றி வருகின்ற கிரெம்ளின் காவலர்கள், ரணதிவே – ஜோஷியின் திட்டங்களையும் – டாங்கேயின் முடிவினையும் எதிர்பார்த்து இருக்கிருர்கள்! ஆனல் இந்திய சர்க்கார் டாங்கேயுடன் பேசுவதற்குத் தயாராக இருக்கிருர்கள் - அதே சமயத்தில் ரணதிவேயை ஒரு கலவரத் தோழராகவே மதித்து – சில கம்யூனிஸ்ட் நாடுகளேக் காணச் செல்லுவதற்கான வெளிநாட்டு அனுமதிகளேக் கூட அவருக்குத் தர மறுத்துவிட்டார்கள்! சோவியத் யூனியனில் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது மாநாட்டுக் கண்ணியமிழந்த காட்சிகளுக்குப் பிறகு – இந்தியக் கம்யூனிஸ்டுகளும் பலவித வேறுபாடுகளிடையே ஒரு ஐக்கியத் தலைமையின் அவசியத்தை உணர்ந்துகொண்டு விட்டார்கள். அந்த அடிப்படையில்தான் அவர்கள் அற்புதமான அமிர்தசரஸ் மாநாட்டில் செயலாற்றினுர்கள். ஆனல் அந்தக் கட்டாயக் கல்யாண முறைகள் குழப்பத்திற்கும் முரண்பாட்டிற்குமிடையே நடத்தப்பட்டவைகளாகும். எனவே தான் மாஸ்கோத் தலைமையால் கட்டுப்படுத்தப்பட்டு வரும் பழைய கம்யூனிஸ்டுகள் எல்லாம் ஸ்டாலினுடைய பள்ளிக்கூடத்திலே பயின்றவர்கள். கட்சி நடவடிக்கைகளில் ஜனநாயகத்தின் அடையாளத்தையே வைத்துக்கொள்ளாதவர்கள் ஒரு ஐக்கியத் தலைமையை உருவாக்க இயலாது! இந்தியக் கம்யூனிஸ்டுகளின் தலைமைப் பீட அதிகாரப் போட்டியில் வடநாட்டுக் கம்யூனிஸ்டுகளே முக்கிய இடம் வகிக்கிருர்கள். பரிதாபத்துக்குரிய தமிழ்நாட்டுப் பாட்டாளி வர்க்கத் தலைமைகள், இங்கே டில்லி மூலவர்களுக்காக கொடியேந்தித் திரிகிருர்கள்! காங்கிரஸ் சர்க்கார்களே கண்டித்துக்கொண்டு- கம்யூனிஸ்ட் சர்க்காரைப் பாராட்டிக்கொள்பவர்களுடைய ஒரு பெருந் தலைவர் டாங்கே. அவர் காங்கிரஸ் மந்திரியின் கையாள் என்று கம்யூனிஸ்டுகளே சொல்கிருர்களாம்! செங்கொடிச் சாயத்திற்கு கேரளாவில் இரத்தத்துளிகளேப் பெற்று மேலும் சிவப்பேற்றியும் கூட எதிர்பாரா வகையில் வெளுத்துப் போகின்றதே! டாங்கேயின் விவகாரம் அவரைப்பற்றிய செய்திகள் அகில இந்திய பொதுச் செயலாளர் அஜய் கோஷின் கவனத்தைக் கவரவில்லே. அதனே, 'ஜனசக்தி' கட்டடத்திற்கு கல்நாட்டும்போது கூட திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கையைக் கண்டிக்கத் தவருத ஏ. கே. கோபாலன் காணவில்லே. கண்டிருந்தும் – "கரண்டை"க் கண்டிக்கத் துணிவில்லே. ஆனல் தமிழ் நாட்டுத் தத்துவ ஞானி ஜீவானந்தம் – அகில இந்திய தொழிற் சங்கத்தின் செயலாளர் கே. ஜி. சிவத்சா என்பவரின் அறிக்கையை ஆதாரமாக வைத்து டாங்கேயின் சோகக் கதையைப் பொய்யாக்கத் துணிகிருர்; உண்மையை உதறித் தள்ளுகிருர்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுல் செயலாளர்களில் ஒருவரான டாங்கே வஞ்சகத்தன்மையுடன் பழிவாங்கப்படுவதை 'கரண்ட்' பத்திரிகை தெரிவித்தது. அதை மறுக்க முன்வந்த சிவத்சா என்ற அவருடைய நண்பர் புதிய செய்தியைத்தான் கொடுத்துள்ளார். டாங்கே மாஸ்கோவில் தன் மனைவியார் உஷாவுடனும், குடும்பத்தின் எல்லா உறுப்பினர்களுடனும் தங்கியிருந்தாராம்! டாங்கே பழிவாங்கப்படுவது ஒருவேளை சிவத்சாவுக்குத் தெரியாமலிருக்கலாம். தெரிந்தும் வெளியே தெரிவிக்க வெட்கப்படலாம்! ஆனல் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் டாங்கே ரஷிய சானிட்டோரியத்தில் சிகிச்சைபெறுவதாகத் தெரிவித்துவிட்டு, மேலும் எதுவும் சொல்லாதது ஏன்? டாங்கே மாதம் ஒன்றுக்கு ரூபாய் 5000 பெற்றுக் கொள்கிருர்; அது மட்டுமல்ல வேறு வகையான வழிகளிலும் பணம் கிடைக்கிறது. அதை வைத்துக் கட்சியில் தகராறு வளர்கிறது. இதற்கெல்லாம் ஜனசக்திப் பட்டாளங்கள் ஏன் பதில் கூறவில்லே?

1957 அக்டோபர் 7 முதல் 13-ந் தேதி வரை நடைபெற்ற மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில், "கட்சி அங்கத்தினர்களிடமிருந்து வருமானத்தின் அடிப்படையில் லெவி வசூலிக்கப்பட்டு, இந்த முறையை சீக்கிரத்தில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். மேலும் முறையாகவும் ரொக்கமாகவும் தானியமாகவும் வசூலிப்பதற்கு, தீவிர முயற்சிகள் எடுக்கவேண்டும். வருடத்தில் ஒரு மாதத்திலாவது நமது செல்வாக்கின் கீழுள்ள எல்லா மக்களிடத்திலும் கட்சி பூராவையும் இயக்கி வசூல் செய்வதற்கு மாகாணக் கமிட்டிகள் ஏற்பாடு செய்யவேண்டும். மாகாணக் கமிட்டிகள் இதை முக்கியக் கடமையாகக் கருதவேண்டும். கட்சி பூராவும் செயல்பட்டால் நல்ல பலன் கிட்டும் என்பதில் ஐயமில்லே... ஒவ்வொரு ஜில்லாவிலுள்ள கட்சி அங்கத்தினர்களின் எண்ணிக்கை, அவர்களுடையவர்க்கம், தொழில் முதலியனவும், முழுநேர ஊழியர்களின் எண்ணிக்கை, அவர்களுக்கு அளிக்கப்படும் சம்பளம் (கொடுபட வேண்டிய சம்பள பாக்கியும்) கணக்கிடப்பட வேண்டும்" என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றினராம். இந்தியக் கம்யூனிஸ்டுகள் தங்களேக்காப்பாற்றிக்கொள்ள இப்படித் தீர்மானம் நிறைவேற்றி வைத்துக் கொண்டிருப்பதால் ஜனசக்தி வட்டாரத்திலிருந்து சரியான விடையை நாம் எதிர்பார்க்கக் கூடாது. இந்த நேரத்தில் கம்யூனிஸ்டுகள் கழகத்தின் நிதிதிரட்டும் பணியை நினைக்கலாம். நன்ருக நினைத்துப் பார்க்கட்டும்; மக்கள் தேடிவந்து கொடுக்கிருர்களா அல்லது தரம் பிரித்துவசூல்செய்து சம்பளப் பட்டுவாடா நடைபெறுகிறதா என்று! மார்க்சும் லெனினும் சம்பள ஆட்களுக்கிடையே சிக்கித் தவிக்கிருர்கள் என்ருல் தோழர் டாங்கேகூட ஒத்துக்கொள்வார். ஆனல் ஜீவானந்தங்கள் தயாரா?

-கூடலரசன்

★ ★ ★

நாடக விமர்சனம்:

"பாஞ்சாலியின் சபதம்"

பெயரைப் பார்த்து, பாஞ்சாலி வருவாள்; பார்த்திபன் காட்சி தருவான்; பரந்தாமன் துணி அளப்பான் என்றெல்லாம் எண்ணி வந்திருந்தோரை, ஏமாற்றத்தில் ஆழ்த்தியது, சென்னே கலேவாணி நாடக மன்றம் கடந்த 16-ம் தேதி நடத்திய **"பாஞ்சாலியின் சபதம்"** என்ற நாடகம்.

நாடகத்தைப் பாராட்டி ஆசிரியர் கண்ணதாசன் அவர்கள் பேசுகிருர்.

குண்டலம் தரித்தோரும் கமண்டலம் தாங்கிகளும் வருவர் என்ற நினைப்பிற்கு மாருக, "பாண்ட்" போட்ட இளேஞர்களும், சமத்துவம் கோரும் பெண்டிருமாக நாடக மாந்தர் வந்தனர். பழைய குவளேயிலே, புதிய பானம் இருந்தது!

நாடகம், தமிழ் மக்களின் அன்ருட வாழ்வின் நிகழ்ச்சிகளேப் பிரதிபலித்தது. சம்பு, நல்லப்பர், முத்து, முத்தையன், ஆலகாலம் முதலியோர் (நவீன) பாஞ்சாலியின் சபதத்தோடு சிக்கி விளேயாடிக் கதையைச் சொல்கின்றனர். இந்தப் பாஞ்சாலி இட்ட சபதமும் நிறைவேறுகிறது. கதையும் முடிகிறது.

பயில்முறை நடிகர்களே பங்குகொண்டதெனினும், கூடிய மட்டும் காட்சிகள் விரைந்தோடின. அப்படி ஓட்டவேண்டும் என்பதற்காகத் திடீரெனச் செய்த சில மாற்றங்களால், பல வேடிக்கைகளும் நிகழ்ந்தன. ஆனல் தோழர்கள் எம். ஏ. இராமலிங்கம், பாபு முதலியோர் தம் நடிப்பால் அவற்றை மறைத்து விட்டனர்.

பாஞ்சாலியாக நடித்த தோழியர் தனலட்சுமி நல்ல எதிர்காலம் உள்ளவர்.

இளந் தோழர்களின் இந்தப் பெருமுயற்சி சென்னே நகராட்சியின் துணே ஆணேயர் திரு. என். சங்கரன் எம். ஏ., எல். டி. அவர்கள் தலைமையிலும், கண்ணதாசன் அவர்கள் முன்னிலேயிலும் நடைபெற்றது. நடிகர்களின் ஆர்வத்தையும் ஆற்றலேயும் வியந்தார் திரு. என். சங்கரன் அவர்கள்.

நாடகத்தைப் பற்றித் தனது கருத்தைக் கூறிய கண்ணதாசன் அவர்கள், பயில்முறை நாடகமன்றத்தினராயினும் இத்துணேச் சிறப்பாக நடித்ததைப் பாராட்டினுர். நாட்டுக்கு உதவும் நல்ல கருத்துக்களே இந்த நாடகத்தின்மூலம் தந்த திறனேயும் வகையையும் வாழ்த்தினுர்.

கலேயைப் பொதுமக்களின் சொத்தாக்கும் முயற்சி, லாபம் தரக்கூடிய ஒன்றல்ல. என்ருலும் துணிந்து மக்களுக்குத் தம் உழைப்பைப் படைத்து, கலேயை மக்களின் நலனுக்குதவிய பெருமை, கட்டாயம் அவர்களேச் சாரும். அந்த நல்ல நோக்கத்தோடு நாடகமாடிய அன்னுரை நாமும் வாழ்த்துகிருேம்; நாடும் வாழ்த்தும்!

★ ★ ★

வெண்பாப் போட்டி

31. தனிச்சீர் : மீன்கொடியோன்.

ஆங்கிலத்தார் போற்றும் அருங்கதைகள் யாவிலுமோ
திங்கிழைத்தோன் வேற்றுவரால் செத்தொழிவான்—
மீன்கொடியோன்
தென்னன் நெடுஞ்செழியன் தீதை உணர்ந்தவுடன்
தன்னெஞ்சாற் செத்தானே தான்!

—பே. சா. தனராசு, நாமக்கல்.

✿

வான்பெய்து சீர்பொங்கும் வள்ளுவனின் பேர்நாட்டை
தான்கொய்து வாழ்கின்ருன் தாவற்ருேன்—மீன்கொடியோன்
ஆண்டிருந்த செல்வத்தை ஆட்கொண்டே போகின்ருன்
பாண்டியனின் வீடெல்லாம் பாழ்!

—தஞ்சை முத்துதாசன்.

✿

ஊண்கொடுத்து ஊர்கொடுத்து ஒண்டமிழில் வல்லவர்க்கு
வான்புகழைத் தான்கொடுத்து வாழ்வளித்தான்—
மீன்கொடியோன்
ஓங்குதமிழ் ஆசிரியர் உண்டிக்கே ஏங்குகிருர்
காங்கிரசு ஆட்சியிலே காண்!

—முத்துவாத்தியார், நாமக்கல்.

✿

தன்கதவைத் தட்டுவதா ரென்றுரைத்தான் கீரந்தை
மன்னவன்கோல் காவாதோ என்றிட்டாள்—மீன்கொடியோன்
தன்கையை வெட்டித் தளர்ந்த முறைநிமிர்த்தி
பொன்கையால் பெற்ருன் புகழ்.

—இரா. செயராமன், கலையூர்.

✿

பூங்கொடியே! என்றுரைத்தான்; போக்கிரியென் றெண்ணுமல்
நான்கொடியள் நம்பி நலிவுற்றேன்;—மீன்கொடியோன்
தானே கரம்குறைத்த தமிழர் திருவிடத்தில்
ஏனோ பிறந்தான் இவன்?

—மா. சுப்பையா, நாரைக்கிணறு.

✿

ஊன்உருக உள்ளம் உணர்ச்சியுறச் சொல்லுதிர்க்கும்
தேன்மழலைச் சேய்களுக்குத் தென்னகத்து—மீன்கொடியோன்
முத்தமிழை ஊட்ட முயன்றமைத்த பள்ளியெலாம்
உத்தமனைப் போற்றும் உயர்ந்து.

—சி. பி. சாமி, திருப்பத்தூர் (வ. ஆ.)

✿

ஊன்கொடுத் தெங்கள் உயிர்கொடுத்துக் காத்திடுவோம்
தேன்வடியும் செந்தமிழே தேம்பாதே—மீன்கொடியோன்
சென்ருனென் றெண்ணுதே; தீர னவன்மரபில்
குன்றுமோ வீரங் குறைந்து?

—ச. இராமசாமி, கயற்கண்ணிபுரம்.

✿

பாண்டவரின் பத்தினியாம் பாஞ்சாலி கற்புநெறி
பாண்டிவாழ் கோப்பெண்டின் பண்பாமோ?—மீன்கொடியோன்
நீத்தவுடன் நீத்த நெறிதவரு நற்செய்கை
கூத்தியர்க்குக் கூறுட் குரல்.

—தென்றல் இராமலிங்கம், சென்னை-6.

✿

தேன்மொழியா மெங்களுயிர்த் தீந்தமிழ்க்கு, நற்கவிஞர்
வான்புகழ்சேர் பாப்புனைந்த வண்டமிழ்க்கு—மீன்கொடியோன்
முச்சங்கத் தேவளர்த்த முத்தமிழ்க்குச் சிச்சியிக்
கொச்சையிந்தி யிடாமோ கூறு.

—இரா. அரங்கனுதன், புதுவை.

✿

தென்மொழியை திஞ்சுவையை செந்தமிழர் தம்முயிரை
வான்புகழும் வண்ணமிகு காவியத்தை—மீன்கொடியோன்
சங்கத் தமிழ்மகளைத் தீய்ப்போர்க்குத் தென்றலே!
சாவே சதமெனச் சாற்று.

—பி. காசிநாதன், சென்னை-16.

✿

மண்ணும் கதைசொல்ல; மாத்தமிழன் வீரத்தை
விண்ணும் புகழ்பாட; வீணரினை—மீன்கொடியோன்
போரில் புறம்கண்டான்! புல்லர் தலைகொய்தே
பாரில் புகழ்கொண்டான் பார்.

—ஏ. பி. காந்திதாசன், வல்லவராயன்பட்டி.

✿

சான்ருேர் துணை இருக்கச் சங்கத்தால் பல்காலம்
தேன்மொழியைப் பேணிட்ட தென்னவனும்—மீன்கொடியோன்
ஆள்வோர்தாம் இன்றுசெயும் அல்லலையே கேள்வியுறின்
வாள்கொண்டு தாக்குவான் வந்து.

—வ. ஆனையப்பன், காடல்குடி.

✿

தேனே! திரளமுதே! தீஞ்சுவையே! நற்கனியே!
ஆனுத ஓவியமே! ஆருயிரே—மீன்கொடியோன்
கொஞ்சி வளர்த்ததமிழ்க் கோகிலமே உன்னிசையில்
நெஞ்சைப் பறிகொடுத்தேன் நின்று!

—குகன் குருசாமி, கமுதி.

✿

ஏன்வந்தான் வீதியிலே என்னுள்ளம் கொள்ளையிடத்
தான்வந்தான் போலும் தமிழிறைவன்—மீன்கொடியோன்
மேனியிலே வைத்தவிழி மீளவில்லை என்செய்வேன்
தேனிலொரு வண்டானேன் நான்!

—க. பொ. இளம்வழுதி, கலிதீர்த்தான்குப்பம்.

✿

ஈன்றெடுத்த நாடும் இணையில்லாச் செந்தமிழும்
மாண்புடன் வாழ மகிழ்வுகொண்ட—மீன்கொடியோன்
சந்ததியே! இந்தியெனும் சத்தில்லாப் புன்மொழியை
சிந்தையினிற் கொள்வதேன் செப்பு.

—'முல்லை', தொ. கோட்டாம்பட்டி.

✿

தேன்மணக்கும் உன்மொழிகள் செந்தமிழின் சீதனமோ?
வான்முகிலை வார்குழலாய்க் கொண்டனையோ?—
மீன்கொடியோன்
வெண்முத்துன் வாளெயிருே? உள்ளமதைக் கொள்ளையுற்ருேய்!
பண்ணிசைப்பேன் பாவையுனைப் பார்த்து.

—சா. கா. சாகுல் அமீது, சித்தையன்கோட்டை.



ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணுசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.